[திரு. ஜி. விசுவநாதன்] [1993 ஏப்ரல் 12

அடகு வியாபாரம் செய்த வகையில் ஈடு வைத்த நகைகளை வேறு இடத்திலே மறு ஈடு வைத்து தொகை பெற்று லேவாதேவி செய்து வந்தார் எனவும், இவ்வாறு நகை ஈடுவைத்த நகைக்குரியோர் பெற்ற கடனைத் திருப்பி செலுத்தி நகையை திருப்பி கேட்ட போது ஒரு சிலருக்கு நகை திருப்பிக் கொடுக்க முடியாத நிலை மேற்படி கடன்காரருக்கு இருந்து வந்தது என்பதும் தெரிய வந்தது. இவ்வகையில் நகையைத் திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தால் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுவது குறித்து இவருக்கும இவரது மகனுக்கும் ஏற்கனவே மனத் தாங்கல் ஏற் பட்டு குடும்பத் தகராறு உள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இவரிடமிருந்து வரவேண்டிய கடனை வசூல் செய்ய ஜப்தி நட வடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை; ஜப்தி நோட்டீஸ் இவருக்கு அனுப்பப்படவில்லை. எனவே, ஜப்தி நடவடிக்கையின் காரணமாக இவர் மரணம் அடைந்தார் என்பது சரியல்ல. நம் முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசு கின்றபோது குறிப்பிட்டார்கள். இதிலே கொள்ளைக்காரர்கள் போல செல்கிறார்கள் என்பது அது இன்றைய சூழ்நிலையில் அப்படிப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்துவது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய காலையில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். ஏன் தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் வழங்கப்படவில்லை என்று கேட்டார்கள். அந்த வங்கியில் 40 சதவீத வசூல் ஆகாத காரணத் தால் இந்த மாவட்டத்திற்கு கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது. அதை மாற்றி அமைத்து ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தான் கடன் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி வசூல் செய்யும் போது சட்டத்திற்கும் புறம்பாக எதையும் செய்யக்கூடாது; தவறு எதுவும் நடந்து விடக்கூடாது ஹாரஸ்மெண்டு இருக்கக் கூடாது என்பதை கடுமையாக அதிகாரிகளுக்குத் தெரிவித்து இருக்கிறோம், கடுமை இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என் பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்து புதிதாக அமைய விருக்கிற மாவட்டத்திற்கு இராமசாமி படையாச்சி மாவட் டம் எனப் பெயர் வைக்கக் கோருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றபோது ஒரு பகுதிக்கு எஸ். எஸ். இராமசாமி படையாச்சி அவர்களுடைய பெயர் வைக்கப்பட வேண்டும் என்கிற பிரச்சினையை எழுப்ப வேண்டு மென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அது வேறு வகையில் எழுப்பப்படுவது பொருந்தாது என்று கருதி அதற்கு அனுமதி மறுத்து இருந்தேன். இருந்தாலும் அந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் வைக்கிறார்கள் என்ற வகையில் அதற்கு அரசின் சார்பில் பதில் அளிக்க மாண்புமிகு வருவாய்த்

1993 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

துறை அமைச்சர் அவர்கள் விரும்பம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையை எழுப்பி இருப்பவர்கள் திரு கோ. ஜானகிராமன், திரு. கே. செல்வராஜ், திரு. மா. சுந்தர தாஸ், திரு. எஸ். டேனியல் ராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. உ. பலராமன, திரு. சி. சுவாமி நாதன் ஆகியோர் இது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசின் சார்பில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மாவட்டங்களை உருவாக்குகின்றபோது, பெயர்களை வைக்கிறபோது, அவர்கள் எல்லாம் பொது வாழ்க்கையில் தொண்டு ஆற்றிய தன்மையைப் பொருத்தும், அல்லது இந்தியத் துணைக் கண்டம் அளவில் அறிமுக மானவர்கள், பணியாற்றியவர்கள் அல்லது மாநில அளவில் அறிமுகமானவர்கள், பணியாற்றியவர்கள் இவர்களுடைய பெயர்களைத்தான் இதுவரையிலும் வைத்து இருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் காயிதே மில்லத் அவர்களுடைய படத்தை இங்கேயும், மாவட்டத்தின் பெயராகவும் வைத்தோம் என்றால் அவர் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையிலோ, அல்லது ஒரு இனத்தைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையிலோ வைக்கவில்லை. முதன் முதலில் உருவாக்கிய அரசியல் நிர்ணய சபையில் பேசுகிற போது அப்போது அங்கே நாட்டினுடைய தேசிய மொழியாக என்ன இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது ஒரே ஒரு மொழி தான் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்றும் அந்த தேசிய மொழியாக இந்தி மட்டும் தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது பல் வேறு மொழிகள் பேசுகிற மக்கள் இணைந்து இருக்கிற இந்தியா வில் ஒரு மொழி மட்டும் தேசிய மொழியாக இருக்கக்கூடாது என்று வாதித்ததோடு மட்டுமல்ல தமிழ் ஆட்சி மொழியாக ஆக வேண்டுமென்று சொன்னார்கள். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கொஞ்சம் இந்தப் பிரச்சினைக்கு நேரடியாக வரவும். (குறுக்கீடு) இந்தப் பிரச் சினைக்கு பதில் அளித்தால் போதுமானது.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தொடர் பாகத் தான் பேசுகிறேன் என்பதைத் தயவுசெய்து நான் மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

நாம் ஏன் இதற்கு காயிதே மில்லத் மாவட்டம் என்று வைத்தோம் என்றால் மதத்தின் அடிப்படையிலோ அல்லது இனத்தின் அடிப்படையிலோ வைக்கவில்லை என்பதைத் தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்,

[1993 ஏப்ரல் 12

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிற்பகல் 12-30

அதேபோல, காமராஜர் மாவட்டம் என்று நாம் பெயர் வைத்தோம் என்றால், காமராஜர் எப்படிப்பட்டவர் என்பது உங்கள் எல்லோருக்கும் நன்றாகவேதெரியும். அதே போலத்தான பெரியார் மாவட்டம் என்று பெரியாருடைய பெயர் வைத்தோம் இதுவும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். இப்படிப் பல்வேறு மாவட்டங்களுக்கு பெயர்களையெல்லாம் வைக்கிறபொழுது, பல் வேறுபட்டவர்களுடைய பெயர்களையெல்லாம் இங்கே வருகிற பொழுது (குறுக்கீடு) தாங்கள் எழுந்து கேட்டால் பதில் சொல் கிறேன. நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லலாம். நான் எதற்கு வேண்டுமானாலும் பதில் சொல்கிறேன். உங்களுக்கு பதில் அமைதியாகச் சொல்கிறேன். நான் இங்கே பேசிக் கொண்டு இருந்தபொழுது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உடைய படத்தைக் காண்பித்த மாதிரி தெரிகிறது. அதற்காகச் சொல்கிறேன். அதேபோலத்தான் எல்லோருடைய பெயரும் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரி வித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். உங்களுக்கு நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், அரசியல் என்பது பாலைப் போன்றது. அந்தப் பாலை சிறிய குழந்தை யும் சாப்பிடும்; பெரியவர்களும் முதியோரும் சாப்பிடலாம். எந்த ஆபத்தும் இருக்காது. ஆனால் அரசியலிலே ஜாதியோ, மதமோ குறுக்கிடுகின்றபோதுதான் சில ஆபத்துக்கள் வந்து விடுகின்றன. இதையெல்லாம் சொல்வதால் நீங்கள் என்னைத் தவறாகக் கருதக் கூடாது. ஜாதியின் பெயராலேயோ மதத்தின் பெயராலேயோ இந்த அரசு இந்தப் படங்களை இங்கே வைக்க வில்லை. எந்த மாவட்டத்தினுடைய பெயரையும் வைக்க வில்லை. ஜாதியினுடைய பெயரால் வைக்கப்படுகிறபொழுது தான் அரசியல் என்பதை நான் பாலுக்கு உதாரணமாகச் சொன் னதற்குக் காரணம். பாலை, பிறந்த உடனேயே குழந்தை சாப்பிடலாம். முதியோரும் சாப்பிடலாம். எந்த ஆபத்தும் இல்லை. அரசியலிலே சாதியும் மதமும் குறுக்கிடாமல் இருக்கும்போதுதான் அதிலே எல்லோரும் சேர்ந்து பணி யாற்ற முடியும். இதை நான் இங்கே சொல்வதற்கு காரணம், வடாற்காடு மாவட்டத்தை அமைக்க வேண்டும்; தென்னாற்காடு மாவட்டத்தை அமைக்கவேண்டும் என்கிற பொழுது, பல பெயர்களை எல்லாம் வைக்கவேண்டுமென்று அப்பொழுது சொல்லப்பட்டது. இப்பொழுதும் பல பெயர்கள் இங்கே வந்திருக்கின்றன. நான் இதையெல்லாம் சொல்வதால் நீங்கள் யாரும் தவறாகக் கருதக் கூடாது. சம்புவராயர் மாவட்டம் என்பது, 12-ஆவது நூற்றாண்டில் அன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருந்த மூவேந்தர்களுடைய ஆட்சிக்காலம் சீர்குலைந்து இருந்தபொழுது அப்பொழுதிருந்த குறுநில மன்னர்களிலே தலைசிறந்த மன்னராக இருந்து மொகலயா சாம்ராஜ்யத்தினுடைய பிரதிநிதியாக மாலீக்காபூர்

1993 ஏப்ரல் 12] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்கின்ற சேனைவீரன் படையெடுத்து வருகிறபொழுது அன்றைக்கு சம்புவராயர் அவர்கள் அன்று அவர்களை முறியடித்து தமிழ் மக்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெயரை வைத்தவுடனேயே, இராமசாமி படையாச்சி பெயர் வைக்க வேண்டுமென்று சொல்கிற பொழுது, இராமசாமி படையாச்சி அவர்கள் என்னைப் பார்த்து நல்ல பெயரை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்; அவரும் எங்கள் இனத்தைச் சார்ந்தவர் தான் என்கிறார்கள். இருந்தாலும் நீங்கள் எல்லாவற்றையும் தாண்டி வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்தப் பெயரை வைக்கிறபொழுது, இங்கேயுள்ள தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும்; காங்கிரசிலே நீண்டநாள் இருந்தவர்களுக்குத் தெரியும். தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டம் என்றால் அங்கே குறிப்பிட்ட சமுதாயத்தினர் அதிகம் இருக்கிறார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. ராமசாமி படையாச்சி அவர்கள் அன்றைக்கு ஒரு கட்சியே வைத்து, நன்றாக அந்தக் கட்சிமூலம் பாடுபட்டு அதிலே வெற்றி பெற்றவர்தான். அதற்கு டாய்லர்ஸ் பார்ட்டி என்று பெயர். அதேபோல, ஈடுஇணையாக மாணிக்கவேல் நாயக்கர் இருந்தார்கள். அவரும் படையாச்சி இனத்தைச் சார்ந்தவர் தான். அவர்கள் காமன்வெல்த் கட்சி வைத்திருந்தார்கள். சீனிவாச படையாச்சி என்பவர் காங்கிரசிலே நீண்டநாள் இருந்தார்கள். ராமசாமி படையாச்சியை பெரிய படையாச்சி என்று அங்கே சொல்லுவார்கள். இது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ, தெரியவில்லை. ராமசாமி படையாச்சியை பெரிய படையாச்சி என்று சொல்வார்கள். இப்படி பல பேர்களுடைய பெயர்களெல்லாம் வந்திருக்கிறபொழுது, எதை வைப்பது என்று தெரியவில்லை. உங்களுக்குத் தெரியும்; அருகாமையிலே இருக்கிற புவனகிரியிலே இருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே வந்தார்கள். அவருடைய பெயர்கூட இதேதான். ராமச்சந்திரராயர். அவரும் இதே இனத்தைச் சார்ந்தவர்தான். ஆகவே, இனத்தைவர் என்று நீங்கள் நினைத்தாலும் இதை ஒத்துக் கொள்ளலாம். இதற்கு முன்பு இதே பெயரில், ராமச்சந்திரராயர் என்று இதே இனத்தைச் சார்ந்தவர் சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–35

ஆனையால் உங்களுடைய இந்த ஜாதி இல்லை என்றாலும், ஜாதியிலுள்ளவர்கள் நம்முடைய ஜாதிக்காரர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று விரும்பினாலும், படையாச்சிகளிலே ராயர் என்று வாண்டையார் என்றும் பல பட்டங்கள் இருக்கின்றன; அந்தப் பெயரிலே வைத்திருக்கிறோம்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 மார்ச் 12

நான் இங்கே சொல்வதற்குக் காரணம், இன்றைக்கிருக்கிற பல்வேறு நிலையில் புதிதாக இந்த மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் 14 ஆம் தேதி அன்றைக்கு ஆரம்பிப்பதாக இருந்தது. 14 ஆம் தேதி ஆரம்பிப்பதற்குச் சில தடங்கல்கள் இருப்பதால்; விரைவிலே இந்த மாவட்டம் அமைக்கப்படும்.

அமைக்கப்படுகிறபொழுது உங்களுடைய கோரிக்கைகளும் இதேபோல பல்வேறு பேர்கள்களுடைய பெயர்கள் இங்கே வந்திருக்கின்றன, இந்தக் கோரிக்கைகளையும் இந்த அரசு உன்னிப்பாகக் கவனிக்கும் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

4. கவன ஈர்ப்பு.

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. சி. சுவாமிநாதன், ஆர். தங்கராஜு, கோ. ஜானகிராமன், கே. ஏ. மனோகரன், எச். எம். ராஜு, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. மா. சுந்தரதாஸ் - சுந்தரதாஸும் இருக்கையில் இல்லை. திருமதி ஜே. லோகம்பாள், டாக்டர் தே. குமாரதாஸ், டாக்டர் சு. மணிமேகலை ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரியலூரில் அமைந்துள்ள சிமெண்ட் ஆலையில் வரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.